Malini — March 2008

# 1401

Register Number | | | | | | |

## தமிழ் — முதல் தாள்

### ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. எது வேதனை என்று திரு. வி. க. கூறியுள்ளார் ?
2. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் சென்றடையும் ?
3. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிகளைக் குறிப்பிடுக.
4. 'அறத்துக்கு ஈறு இல்லை' என அனுமன் கூறக்காரணம் யாது ?
5. யூதர்கள் சிலுவை மிசை எழுதியது யாது ?
6. பாடாண் திணை - விளக்குக.
7. பாணன் எங்கு பாடினான் ? எவ்வளவு நேரம் பாடினான் ?
8. குமரகுருபரர் பாடிய நூல்களுள் நான்கின் பெயர்களைக் கூறுக.
9. பீர்க்கம் பூவை வாணிதாசன் எதற்கு உவமிக்கிறார் ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. நாமக்கல்லார் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?
11. செல்வத்தை அழிக்கும் படைகள் யாவை ?
12. 'காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு

    மேரு வலந்திரித லான்' - உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.
13. 'தன்னுடைய அடிமைத்திறம் தவறுடையதன்று' என அனுமன் ஏன் கூறினான் ?
14. கடலின் மேன்மைத் தன்மைகள் யாவை ?
15. பாரத நாட்டை ஒளிர்தரு நாடு எனப் பாரதியார் கூறக் காரணங்கள் யாவை ?
16. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறாமல் எழுதுக.

17. 'வீடின .......' என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4

18. 'உடையர் ......' என்று தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'புகழ்' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 8 = 8$

20. புகழுடையார் எய்தும் மேன்மையும், அது இல்லாதாரது தாழ்வினையும் விளக்கி வரைக.

21. கம்பர், அனுமன் வாயிலாக உரைத்த அறநெறிகள் யாவை ?

22. பாரதிதாசன் 'உலக ஒற்றுமை' பற்றிக் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. $4 \times 1 = 4$

23. பொருத்துக :

| நாடு | | தலைநகரம் |
|---|---|---|
| அ) பாண்டியநாடு | — | வஞ்சி |
| ஆ) சோழ நாடு | — | காஞ்சி |
| இ) சேர நாடு | — | மதுரை |
| ஈ) தொண்டை நாடு | — | புகார் |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $6 \times 1 = 6$

24. திரிகடுகம் .................. அமைந்த நூல்

அ) வெண்பாக்களால் ஆ) ஆசிரியப்பாக்களால் இ) வஞ்சிப்பாக்களால்.

25. திரிகூடமலை என்பது .................. .

அ) வேங்கடமலை ஆ) மருதமலை இ) திருக்குற்றால மலை.

26. கந்தர் கலிவெண்பாவை இயற்றியவர்

அ) குமரகுருபரர் ஆ) திரிகூடராசப்பர் இ) கச்சியப்பர்.

27. தமிழ் வேந்தர் வெளியிட்ட சின்னக் காசு ..................

அ) நிலவு ஆ) விண்மீன் இ) செங்கதிரோன்.

28. கலம்பக உறுப்புகள்

அ) ஆறு ஆ) பன்னிரெண்டு இ) பதினெட்டு.

29. 'கிறித்தவக் கம்பர்' என்று புகழப்படுபவர்

அ) எச். ஏ. கிருட்டிணப் பிள்ளை

ஆ) வேதநாயகம் பிள்ளை

இ) சங்கர நாராயணப் பிள்ளை.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $5 \times 2 = 10$

30. மனித ஆற்றல் வள அணிவகுப்பாகக் கருதப்படுவன யாவை ?

31. கட்டாயப் படிப்பு பற்றித் திரு. வி. க. யாது கூறுகிறார் ?

32. கலை - இரு பொருள் கூறி, விளக்குக.

33. அறிவுரை கூறுதல் பற்றி மு. வ. அவர்களின் கருத்து யாது ?

34. திருக்குறளிலுள்ள எந்தெந்த அதிகாரங்களில் வ. உ. சி. அவர்களுக்கு ஆர்வம் அதிகம் ?

35. கலிலியோ கண்ட உண்மை யாது ?

36. செல்வர்கள் ஔவையாரிடம் வேண்டியது என்ன ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. $4 \times 4 = 16$

37. ஔவையார் தம் வாய் யார்யாரைப் பாடியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார் ?

38. சீதக்காதியின் சிறந்த பண்புகள் யாவை ?

39. இந்திய நாட்டின் இயற்கைத் தாது, கனிம வளம் பற்றி விளக்குக.

40. வாழ்வுசார் கல்வி பற்றித் திரு. வி. க. யாது கூறுகிறார் ?

41. வண்ணம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

42. 'எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டும்' என மு. வ. விரும்புகிறார் ?

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. $1 \times 8 = 8$

43. உமறுப்புலவர் சீறாப்புராணத்தைச் செஞ்சொற் கவிதையாக அமைத்த நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

44. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றித் தொகுத்து எழுதுக.

45. இந்திய மகளிர், ஆடவர் பற்றிக் கலாம் அவர்கள் கொள்ளும் பெருமிதத்தை விளக்கி எழுதுக.

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $4 \times 1 = 4$

46. ஒரு துறைக்கோவை என்பது ............. .

அ) அகத்துறை சிற்றிலக்கியம்

ஆ) அந்தாதி

இ) சிலேடை.

47. பொருளாதாரச் சாதனைகளுக்கு இட்டுச் செல்வது ............. .

அ) மனித ஆற்றல் வளம்

ஆ) கணிப்பொறி நிபுணத்துவம்

இ) இயற்கை வளம்.

48. வ. உ. சி. அவர்களுக்கு மீண்டும் வழக்கறிஞர் பதவி கிடைக்க உதவியவர்

அ) சி. கே. சுப்பிரமணியனார்

ஆ) பரலி. சு. நெல்லையப்பர்

இ) வாலஸ்துரை.

49. எட்டப்ப மன்னரின் சபையில் தலைமைத் தமிழ்ப்புலவராய் இருந்தவர்

அ) சேகு முதலியார்

ஆ) வாலை வாரிதி

இ) கடிகை முத்துப்பிள்ளை.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் **இரண்டினை** மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. $2 \times 1 = 2$

50. அ) சிறந்தோங்க

ஆ) மட்டற்ற

இ) முதன்முதலாக.